**அரசகரும மொழிகள் ஆணைக்குழு - 2014**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு முடிவடைந்து எனினும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 585,730 பெறுமதியான சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் அரசின் மானியங்களை கணக்கு வைப்பது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் இருந்ததுடன், இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெறும் அரச மானியங்கள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அரச மானியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன காலரீதியாக காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) 5.4.4 ஆம் பந்தி | ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவுகள் காப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்த தொகையில் ஆகக்கூடியது 20 சதவீதம் முற்பணமாக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், இரண்டு சந்தர்ப்பங்களில் 50 சதவீதப் படி ரூபா 455,730 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) 5.4.10 ஆம் பந்தி | ஒப்பந்தத்தின் செயலாற்றல் வலுவிழந்தால் கொள்வனவு உரித்தை பாதுகாப்பதற்காக செயலாற்றல் பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் செயலாற்றல் பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | (iii) 8.9.1 ஆம் பந்தி | பொருட்கள் சேவைகள் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 500,000 விஞ்சும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதும் இரண்டு சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 5.2.1 ஆம் பிரிவு | பாதீட்டுடன் எதிர்வுகூறப்பட்ட ஐந்தொகை யொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 6.5.1 ஆம் பிரிவு | கணக்குகளுடன் வரைவு ஆண்டறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10(1) மற்றும் (2) | ஆணைக்குழுவில் சேவை புரிந்த 08 ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு தொகை நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 2,985,071 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,131,575 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 146,504 ஆன அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அரசகரும மொழிகள் ஆணைக்குழு அடையப்பட்டிருந்த இலக்குகளை பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(அ) அரசகரும மொழிக் கொள்கை தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 60 அரை அரச நிறுவனத் தலைவர்களையும் 17 தனியார் நிதி நிறுவன தலைவர்களையும் பங்குபெறச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் முறையே 30 மற்றும் 40 பேர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

(ஆ) 2013 ஆம் ஆண்டு வரை மொழிக் கணக்காய்வுக்குட்பட்டிருந்த 40 நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை 2014 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 12 நிறுவகங்களில் மாத்திரம் அமுல்படுத்துவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் கூட்டிணைந்த திட்டம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பணத்தை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் அனுப்பப்படாமையால் ரூபா 342,035 தொகை மிகை அறவீடாக விதிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆணைக்குழுவிற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 நவம்பர் 03 ஆம் திகதி அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவரால் செத்சிரிபாய கட்டிடத்தொகுதியில் 650 சதுரமீற்றர் அளவிலான இடமொன்றை தருமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரிடம் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரதிபலனாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரின் (செயற்திட்ட முகாமைத்துவம்) 2011 திசெம்பர் 06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செத்சிரிபாய கட்டிடத்தொகுதியின் I ஆம் கட்டத்தில் 650 சதுரமீற்றர் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக அப்போதிருந்த தேசிய மொழிகள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எதுவித பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமல் 3500 சதுர அடி இடவசதியுடன் கூடிய புதிய கட்டிடமொன்றை வாடகைக்கு எடுப்பதற்காக 2014 சனவரி 10 ஆம் திகதி ஆணைக்குழுவினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கட்டிடம் அத்தேவைப்பாட்டை விட 71 சதவீதத்தை விஞ்சிய 6000 சதுர அடியுடன் கூடிய கட்டிடமொன்றாகும். அதன் பிரகாரம் இக்கட்டிடத்தின் கீழ் மாடி மற்றும் மூன்றாம் மாடியில் 2000 சதுர அடியுடன் கூடிய இடஅளவு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) கட்டிடமொன்றை வாடகைக்கு எடுப்பதற்கான பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் கட்டிடம் காற்றுச்சீராக்கப்பட்டிருத்தல் தெரிவுசெய்தலின் ஒரு நியதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், காற்றுச்சீராக்கப்படாத மேற்குறித்த கட்டிடம் வாடகைக்கு எடுத்து காற்றுச்சீராக்கியைப் பொருத்துவதற்காக கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு ஆணைக்குழுவால் ரூபா 374,129 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. கட்டிடம் வாயுச்சீராக்கம் செய்யப்படாமை காரணமாக ரூபா 44,100 செலவு செய்து பெரியளவிலான 03 (Industrial Fans) மின்விசிறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தைப் பரிசோதித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அத்தியவசிய வசதியொன்றான காற்றுச்சீராக்க வசதிகள் வழங்கும் பரிந்துரையையும் கருத்திற் கொள்ளாமல் இக்கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

(iii) விலை விபரங்களை மதிப்பிடுவதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சு கேள்விச் சபை இக்கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதை 2014 யூன் 06 ஆம் திகதி அங்கீகரித்த போது கேட்போர் கூடமொன்று இருப்பதும் ஒரு தேவைப்பாடாகக் கருதியிருந்த போதிலும், குறித்த கட்டிடத்தில் கேட்போர்கூடமொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கட்டிடத்தில் பாதுகாப்பற்றதாக இருக்கும் பகுதிக்கு பாதுகாப்பு வேலியொன்றை உரிமையாளரால் நிறைவேற்ற வேண்டுமென்று அமைச்சு கேள்விச் சபை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 பெப்ரவரி 10 ஆம் திகதி வரையிலும் குத்தகை வழங்குபவரால் அவ்வேலியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) கொள்வனவுகள்